பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

13 12 2024　　　　6 45
வெள்ளிக்கிழமை　　　காலை

தலைப்புச் செய்திகள்

- நாட்டில் அரசியலமைப்பு சாசனம் ஏற்கப்பட்டதன் 75-ஆம் ஆண்டையொட்டி மக்களவையில் இரண்டு நாள் சிறப்பு விவாதம் இன்று தொடங்குகிறது.
- மயிலாடுதுறை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து கணக்கீடு செய்யப்பட்டு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.
- திண்டுக்கல் தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று இரவு நேரிட்ட தீ விபத்தில் ஒரு சிறுமி உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர்.
- தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்திய அணி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டில் அரசியலமைப்பு சாசனம் ஏற்கப்பட்டதன் 75-ஆம் ஆண்டையொட்டி மக்களவையில் இரண்டு நாள் சிறப்பு விவாதம் நடைபெறும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இன்றும்,. நாளையும் நடைபெறும் இந்த சிறப்பு விவாதத்தை கேள்வி நேரத்துக்குப் பின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் தொடங்கி வைத்து பேசுகிறார்.

இந்த விவாதத்திற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை பதிலளித்து பேசய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மாநிலங்களவையில் இது குறித்த விவாதம் வரும் 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று இந்த விவாதம் நடத்தப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் அதிகனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) ----- 42 செகண்ட்*

இதனிடையே மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று பரவலாக நல்ல மழை பெய்துள்ளது,

கனமழை எச்சரிக்கையை அடுத்து நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, தஞ்சாவூர், திருச்சி, விழுப்புரம் மாவட்டங்களில் இன்று பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது,

மயிலாடுதுறை, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், ராமநாதபுரம் திண்டுக்கல், கடலூர், சேலம், கரூர், தேனி மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை விடப்பட்டுள்ளது.

தொடர்மழை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் கொசஸ்தலை ஆற்றில் விநாடிக்கு ஐயாயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதன் காரணமாக கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தனசேகர் ) --45--- செகண்ட்*

திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஆற்றின் கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மழை தொடர்பாக புகார் அளிக்க மாநகராட்சி அலுவலகத்தில் 24 நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளதாக மேயர் திரு ஜெகன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக உதகை – மேட்டுப்பாளையம், உதகை – குன்னூர் இடையேயான மலைரயில் சேவை இன்றும் நாளையும் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

மயிலாடுதுறை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து கணகீடு செய்யப்பட்ட உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழை பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டத்தில் 362 இடங்களில் நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மெய்யநாதன் ) --45-- செகண்ட்*

**[]<<<>>>[]**

திண்டுக்கல் தனியார் மருத்துவமனை ஒன்றில் நேற்று இரவு நேரிட்ட தீ விபத்தில் ஒரு சிறுமி உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்கள் திண்டுக்கல் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து சம்பவம் குறித்த தகவல் அறிந்ததும் தீயணைப்பு வீரர்கள் மருத்துவமனைக்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டதுடன், மருத்துவமனையில் சிசிச்சை பெற்று வந்தவர்களையும் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

*( வாய்ஸ்பைட் - ராஜசேகர் ) -33---- செகண்ட்*

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் திருக்கார்த்திகை திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

தீபத்திருழாவின் முக்கிய நிகழ்வாக இன்று மாலை ஆறு மணிக்கு மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படுகிறது.

இன்று அதிகாலை ஆலயத்தில் பரணி தீபம் ஏற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரவிச்சந்திரன் ) -42---- செகண்ட்*

தீபத்திருவிழாவையொட்டி இன்று முதல் மூன்று நாட்களுக்கு சென்னை தாம்பரம், விழுப்புரம், காட்பாடி ஆகிய ரயில் நிலையங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

சிரியா அதிபர் திரு பசரல் ஆசாத் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிய நிலையில், சிரியாவின் முக்கிய ராணுவ கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியது.

**[]<<<>>>[]**

நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் நாட்டின் நேரடி அந்நிய முதலீடு 26 சதவீதம் அதிகரித்து 42 புள்ளி ஒரு பில்லியன் டாலராக உள்ளது..

**[]<<<>>>[]**

ராமநாதபுரம் மாவட்டம் திருப்பாலைக்குடியில் மீனவர்களுக்கான அரசு வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் விற்பனை மையத்தை மாநில மீன்வளத்துறை அமைச்சர் திரு அனிதா ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்.,

**[]<<<>>>[]**

சென்னையில் உள்ள எம் ஜி ஆர் திரைப்படக் கல்லூரியில் 40 கோடி ரூபாய் மதிப்பில் அதிநவீன தொழில்நுட்பங்களுடன்கூடிய மூன்று புதிய படப்பிடிப்பு தளங்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட உள்ளதாக மாநிரல தமிழ் வளர்சசித்துறை அமைச்சர் திரு மு பெ சாமிநாதன் அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன மூன்று மீனவர்களை தேடும் .பணி நடைபெற்று வருகிறது.

[]<<<>>>[]

சௌதி அரேபிய அமைச்சகத்தில் பணி புரிய விரும்பும் மருத்துவர்கள், **www.omcmanpower.tn.gov.** என்ற இணைய தளத்தில் பதிவு செய்யுமாறு அயல்நாட்டு வேலைவாய்பபு நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்திய அணி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா ஒன்பது – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் தாய்லாந்தை வென்றது.

தீபிகா நான்கு கோலும், கனிகா மூன்று கோலும், ஷாக்சிராணா, லால்ரின் புய் தலா ஒரு கோலும் போட்டனர்.

[]<<<>>>[]

ஒடிஸா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் ஆயூஷ் ஷெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்,

[]<<<>>>[]

காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-15, 8-21, 21-19 என்ற செட் கணக்கில் சீனாவின் வாங் டே-யை வென்றார்.) **co**

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் ஒடிஸா இரண்டு- ஒன்று என்ற கோல்கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் ஆட்டத்தில் தில்லி அணி – தெலுகு அணியை வென்றது.

உத்திரபிரதேசம் - பெங்கால் அணிகளுக்கு இடையேயான போட்டி ட்டிராவில் முடிவடைந்தது.

**[]<<<>>>[]**